©
தமிழ்நாடு அரசு
2013

கையெழுத்துத் தொடர்

# நிதி (ஓய்வூதியம்)த் துறை

## அரசாணை எண்:62, நாள் : 28.02.2013

*(நந்தன, மாசி–16, திருவள்ளுவர் ஆண்டு 2044)*

தமிழ்நாடு அரசுப் பணியாளர் சிறப்பு சேம நலநிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம், 2000 – திட்டத்தின்கீழ் வட்டி கணக்கிட்டு வழங்குவது – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**படிக்கவும்:-**

1. அரசாணை நிலை எண்.504, நிதி(ஓய்வூதியம்)த் துறை, நாள்.2.11.2000.
2. அரசுக் கடித எண்.75910/ஓய்வூதியம்/2000–1, நாள்.2.11.2000.
3. அரசுக் கடித எண்.75910/ஓய்வூதியம்/2000–2, நாள்.2.11.2000.

------

**ஆணை:**

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் சிறப்பு சேம நலநிதி மற்றும் பணிக் கொடைத் திட்டம், 2000 என்ற திட்டம் 1.10.2000 முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

2. தமிழ்நாடு அரசுப் பணியாளர் சிறப்பு சேம நலநிதி மற்றும் பணிக் கொடைத் திட்டம், 1984ல் ஏற்கெனவே சந்தாத் தொகை செலுத்தியவர்களுக்கு விருப்பத்தின்பேரில் மாதம் ரூ.50/–ம், 1.10.2000க்குப் பிறகு பணியில் சேருபவர்களுக்கு மாதம் ரூ.70/–ம் சந்தாத் தொகையாக பிடித்தம் செய்யப்பட்டு வருகிறது.

3. இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் வட்டி ஆண்டுக்கு 11% அடிப்படையில் கணக்கிடப்பட்டு, மாதம் ரூ.70/–செலுத்துபவர்களுக்கு பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் வெளியிடப்பட்ட அட்டவணைப்படியும், மாதம் ரூ.50/– சந்தாத் தொகை செலுத்துபவர்களுக்கு பார்வை மூன்றில் படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் வெளியிடப்பட்ட அட்டவணைப்படியும் முதிர்வுத் தொகை வழங்கப்படுகிறது.

4. இனிவருங்காலங்களில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் சிறப்பு சேம நலநிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம், 2000–இன் கீழ் வழங்கப்படும் வட்டித் தொகையினை 31.3.2013 வரையிலான காலத்திற்கு பார்வை இரண்டு மற்றும் மூன்றில் படிக்கப்பட்ட அரசு கடிதங்களில் வெளியிடப்பட்ட அட்டவணைப்படி கணக்கிட்டும் மற்றும் 1.4.2013க்குப் பிறகு அவ்வப்போது பொது வருங்கால வைப்பு நிதிக்கு அரசால் வழங்கப்படும் வட்டி விகிதத்தின் அடிப்படையில் கணக்கிட்டும் வழங்கிட அரசு ஆணையிடுகின்றது.

5. இத்திட்டத்தின்கீழான பிற நிபந்தனைகள்/ விதிமுறைகளில் மாற்றம் ஏதுமில்லை.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. சண்முகம்**
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
அனைத்து அரசுச் செயலாளர்கள்.
தலைமைச் செயலகத்தின் அனைத்து துறைகள்.
சட்டமன்ற பேரவைச் செயலகம், சென்னை–600 009.
ஆளுநரின் செயலகம், ராஜ்பவன், சென்னை–600 032.
மாநில தகவல் ஆணையம், எண்.2, தியாகராய சாலை, எல்டாம்ஸ்ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை–18.
அனைத்துத் துறைத் தலைவர்கள்.
மாநிலக் கணக்கு துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத்தொகை),
சென்னை–600 018. (பெயரில்)
மாநிலக் கணக்கு துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத்தொகை),
சென்னை–600 018.
முதன்மை மாநிலக் கணக்கு துறைத் தலைவர் (தணிக்கை-I), சென்னை–600 018.
மாநிலக் கணக்கு துறைத் தலைவர் (தணிக்கை-II), சென்னை–600 018.
மாநிலக் கணக்கு துறைத் தலைவர் (CAB), சென்னை–600 009.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை– 600 104.
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை.600 003.
மாநகராட்சி ஆணையர், சென்னை / மதுரை / கோயம்புத்தூர் / திருச்சிராப்பள்ளி / சேலம் /
திருநெல்வேலி / ஈரோடு / திருப்பூர்/ வேலூர் / தூத்துக்குடி.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் / மாவட்ட நீதிபதிகள் / முதன்மை
நீதித்துறை மாஜிஸ்ட்ரேட்டுகள்.
அனைத்து மண்டல இணை இயக்குநர்கள், கருவூலக் கணக்குத் துறை.
ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், சென்னை–600 006.
அனைத்து கருவூல அலுவலர்கள்/அனைத்து துணைக் கருவூல அலுவலர்கள்.
அனைத்து மாநிலக் கழகங்கள் / நிறுவனங்கள்.

<u>நகல் பெறுநர்</u>:
நிதித் (அ.ந.மு.I / அ.ந.மு.II / அ.ந.மு.III / பல்வகை / ஓ.கு.தீ / ஊ.கு. / வரவு செலவு– பொது II /
வரவு செலவு–பல்வகை / பொது) துறை, சென்னை–9.
முதலமைச்சரின் தனிச் செயலாளர், சென்னை–600 009.
ஓய்வூதிய இயக்குநர், டி.எம்.எஸ். வளாகம், சென்னை–600 006.
கருவூலக் கணக்கு இயக்குநர், சென்னை–600 015.
உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், சென்னை–600 108.
அனைத்து நகராட்சி ஆணையர்கள்.
அனைத்து ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள்.
தலைவர், தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம், டி.பி.ஐ. வளாகம், கல்லூரிச் சாலை, சென்னை–600 006.
தலைவர், தமிழ்நாடு தலைமைச் செயலக ஓய்வுபெற்ற அலுவலர்கள் சங்கம், எண். 70,
மேடவாக்கம் டேங்க் சாலை, கீழ்பாக்கம், சென்னை–600 010.
தலைவர், அனைத்திந்திய ஓய்வுபெற்றோர் சங்கக் கூட்டமைப்பு, 22, கவரத் தெரு,
மேற்கு சைதாப்பேட்டை, சென்னை–600 015.

தலைவர், ஓய்வுபெற்ற ஆசிரியர் சங்கம், எண் 12, அபயாம்பாள்புரம், மயிலாடுதுறை,
நாகப்பட்டினம் மாவட்டம்.
மாநிலத் தலைவர், அகில பாரத குடிமை பெற்றோர் மற்றும் ஓய்வூதியர் அமைப்பு,
எண் 7, பாரதிதாசன் சாலை, அவினாசி, கோயம்புத்தூர் மாவட்டம்.
தலைவர், இந்திய அதிகாரிகள் சங்கம், எண் 35, திரு.வி.க. நெடுஞ்சாலை,
இராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை– 600 014.
தலைவர், தமிழ்நாடு முதியோர் குடியுரிமை பெற்றோர் சங்கம், எண் வி 95,
அண்ணா நகர், சென்னை– 600 040.
தலைவர், தமிழ்நாடு முதுநிலை குடியுரிமை பெற்றோர் மற்றும் ஓய்வூதியர்கள் நல சங்கம்,
எண் 38–பி, முதல் பிரதான சாலை, பெருமாள்புரம், திருநெல்வேலி.
தலைவர், ஓய்வுபெற்ற அலுவலர் சங்கம், நாராயணராவ் மாளிகை, முத்துகாளத்தி தெரு,
திருவல்லிகேணி, சென்னை– 600 005.
இருப்புக் கோப்பு / உபரி நகல்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.